# அரியலூர் - தேவனூரில் எஸ்.சிவசுப்பிரமணியன் நினைவு நூலகம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!







அரியலூர், மார்ச் 16 -

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், தேவனூர் கிராமத்தில் கிராமப்புற மாணவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை மேம்படுத்தி அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் உன்னத நோக்கில், அரியலூர் மாவட்டம் - ஆண்டிமடம் - தேவனூர் கிராமத்தில், பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் பெரியார் விருதுபெற்ற எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களின் நினைவாகக் கட்டமைக்கப் பட்டுள்ள 'எஸ். சிவசுப்பிரமணியன் நினைவு நூலகத்தை', தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றிச் சிறப்பித்தார்.

இந்நூலகத்தில் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, இந்த நூலகத்தில் கணினிப் பயிற்சி மையமும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையமும் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கவுள்ளன.


இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகரன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், எஸ்.எஸ்.சிவக்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஆர்.கலிய பெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, எதிர்காலத் தமிழ் நாட்டை வளப்படுத்தும் நமது திராவிட மாடல் அரசின் இத்தகைய சிறப்பான முன்னெடுப்புகள் என்றென்றும் தொடரும். வெல்வோம் 200 படைப்போம் வரலாறு.

## மின்வாரிய ஊழியர்களுக்கு 5 ஆண்டுகளில் 2ஆம் முறை ஊதிய உயர்வு!

# வரலாற்றுச் சாதனை படைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!



சென்னை, மார்ச் 16 -

மின்வாரியத்தில் பணிபுரிபவர்களுக்கு 5 ஆண்டுகளில் 2வது முறையாக ஊதிய உயர்வு, மின்வாரிய 69 ஆண்டு கால வரலாற்று சாதனை புரிந்த முதலமைச்சருக்கு நன்றி என மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு 5 ஆண்டுகளில் 2வது முறையாக 01.12.2023 முதல் அனைவரும் மனம் மகிழும் வண்ணம் வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மின்கழகத் தொ. மு.ச. பொதுச்செயலாளர் பா. மணிமாறன் அறிக்கை விடுத்துள்ளார்.

### முத்தமிழறிஞர் வழங்கிய சலுகைகள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக 10.02.1969-ல் பொறுப்பேற்றவுடன், தொழிற்ச ங்கங்கள், மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும்படி கோரிக்கை வைத்தவுடன் அதனை ஏற்று 27.07.1970 அன்று தொழிற்சங்கங்களைத் தன் அறைக்கே அழைத்து பேசி முதன் முதலில் ஊதிய உய ர்வை மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கினார்கள்.

01.12.1996 ஆம் ஆண்டு முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை மத்திய அரசு ஊழியர்கள் பெற்ற 40 சதவிகிதம் ஊதிய உயர்வை மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

2006-ல் ஐந்தாவது முறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, 2001-2006 அதிமுக ஆட்சியின் போது ஒரு ஊதிய உயர்வை இழந்த மின்வாரியத் தொழிலாளர்களுக்கு, ஈடுசெய்யும் விதமாக 01.08.2006-ல் 50 சதவிகிதம் அகவிலைப்படியை அடிப் படை ஊதியத்துடன் இணைத்து, இன்னொரு ஊதிய உயர்வைப் போல் மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கியவர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### முதலமைச்சர் அன்புத்தளபதி வழங்கிய சலுகைகள்!

தமிழ்நாடு முதலமை ச்சராக அன்புத்தளபதி அவர்கள் 07.05.2021-ல் பொறுப் பேற்றப் போது மின்வாரியத்தில் கடும் நிதிச் சுமையிலும் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு கருணைத் தொகையுடன் போனஸ், பொங்கல் பரிசு, பணிபுரிபவர்களுக்கும், பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் பணி பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம் எல்லாவற்றிக்கும் மகுடம் வைத்தது போல், மின்சார வாரியம் பொதுத்துறையாகவே தொடரும் என பல சலுகைகளை வழங்கினார்கள்.

### 5 ஆண்டுகளில் முதல் ஊதிய உயர்வு!

01.12.2019 முதல் தமிழ்நாடு மின்வாரியத்தில் பணி புரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த ஊதிய உயர்வு 10.05.2023 அன்று வழங்கினார்கள். இதில் 6ரூ ஊதிய உயர்வு, 12/2019 முதல் 3/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/- 01.04.2022 முதல் 31.05.2023 வரை நிலுவைத்தொகை, 01.12.2019 அன்று பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3ரூ சதவிகிதம் என அனைவரும் மகிழும் வண்ணம் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள் வழங்கினார்கள்.

### 2வது ஊதிய உயர்வு!

01.12.2019-ல் போடப்பட்ட ஊதிய உயர்வு, ஒப்பந்தம் 30.11.2023-ல் முடிவடைந்தவுடன், மின்வாரியத் தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்கள் 01.12.2023 ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக் குழு அமைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு, மின்வாரியம் மற்றும் அனைத்துத் தொழிற்சங்கங்களுடன் பல கட்டப் பேச்சு வார்த்தை நடத்தி, சுமூகமாக இன்று 14.03.2026 முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில் தமிழ்நாடு அரசு, மின் வாரியம் மற்றும் தொழிற் சங்கங்கள் உடனான ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மின் வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு,

1. 01.12.2023 முதல் 6 சதவிகிதம் ஊதிய உயர்வு
2. 01.12.2023 முதல் 30.11.2025 வரை (24 மாதங்கள்) ரூ.500/- வீதம் (ஒரே தவணையில் நிலுவைத்தொகை)
3. 01.12.2025 முதல் 28.02.2026 வரை (3 மாதங்கள்) நிலுவைத் தொகையுடன், (ஒரே தவணை)
4. 01.12.2023 முதல் பத்து ஆண்டுகள் பணிமுடித்த தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3ரூ என அனைவரும் மனம் மகிழும் வண்ணம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அனைத்து பிரிவிலும் 50,000 பேர் பணியிடங்கள் காலியாக இருந்தும் மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள், பேரிடர் காலங்களான கடுமையான புயல், மழை, வெள்ளம் மற்றும் கோடைக் காலங்களில் என அனைத்துப் பருவ நிலை மாற்றங்களிலும் மேலும், 2020 கொரோனா பெருந் தொற்று அலையிலும், 2021 கொரோனா பெருந் தொற்று 2ம் அலையிலும், தன் குடும்பம் / வீடு / மக்களை மறந்து தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க உழைத்தவர்களுக்கு தாயுள்ளத்தோடு, தாயு மானவர் அவர்கள் பல சலுகைகளை வழங்கி கொண்டிருக்கிறார்கள்.

### சரித்திர சாதனை நிகழ்த்திய முதல்வர்!

முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் தொடங்கி 69 ஆண்டு கால வரலாற்றில், முதல்முறையாக தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்கள் என 5 ஆண்டுகளில் 2 முறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் வழங்கி வரலாற்றுச் சாதனை நிகழ்த்தினார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊதிய உயர்வினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களின் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களுக்கும், மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரியத் தலைவர் அவர்களுக்கும், ஊதிய உயர்வு குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும், தமிழ்நாடு மின்கழகத் தொமுச சார்பாகவும், அனைத்து மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் சார்பாகவும், எங்களது மனமார்ந்த நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்செந்தூர் வட்டம் ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றியம், பழைய காயல் தியாகி பெஞ்சமின் அவர்களின் சிலையினை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார் நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், ஒன்றிய செயலாளர் கோட்டாளம், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி.பி.செல்வகுமார், செந்தூர் மணி, பூம்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் விளம்பரம் தேடுவதாக விமர்சிக்கும் அன்புமணி ராமதாஸ்

# தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை பெற்றுத்தர ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்துவாரா?

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!



சென்னை, மார்ச் 16 –

ரீல்ஸ் வெளியிட்ட பள்ளி மாணவர்களை சென்னை தலைமை செயலகத்திற்கு அழைத்து அறிவுரை வழங்கி வீடியோ வெளியிட்ட முதலமைச்சர் அவர்களின் செயலை விமர்சித்த மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு.தியாகராஜன் பதில் அளித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கடலூர் மாவட்டம் சாத்தியப்பட்டு கிரா மத்தைச் சேர்ந்த தேவா ,ஜீவா என்ற சிறுவர்கள் நெல்லி தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு படித்து வருகின்றனர். நெல்லித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 30 மாணவ, மாணவிகள் படித்து வருவதாகவும் அங்கு இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள் எனவும் வகுப்பிற்கு ஒரு ஆசிரியரை கூட நியமிக்காமல் முதல்வர் ரீல்ஸ் போட்டு விளம்பரம் தேடுவதாக தங்களின் X பதிவில் தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள்.

மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களே உண்மையில் அந்தப் பள்ளியில் 19 மாணவ, மாணவிகள் தான் தான் பயின்று வருகிறார்கள். கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் ஒரு வகுப்பில் 30 மாணவருக்கு ஒரு ஆசிரியர் வீதம் என்று இருந்தாலும், மாணவர்கள் நலன் கருதி 19 மாணவர்களுக்கே 60 மாணவர்களுக்கு வழங்க வேண்டிய இரண்டு ஆசிரியர்களை அந்தப் பள்ளிக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதை விட அதிகமாக அந்தப் பள்ளியில் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

அரசு பள்ளி மாணவர்கள் நலன் சார்ந்து வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் நியமிக்க வேண்டும் என்ற தங்களின் எதிர்பார்ப்பு மற்றும் கோரிக்கைகள் வரவேற்கதக்கது. தற்போது உள்ள சூழலில் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் அடிப்படையிலேயே மாநில அரசு ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற நிர்பந்தம் உள்ளது. அதன் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் நியமனம் என்ற தாங்கள் கோரிக்கை அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்தும் என்பதற்கு மாற்று கருத்து இல்லை. தற்போது அதற்கான நல்ல வாய்ப்பு உருவாகியுள்ளது. தாங்கள் ஒன்றிய அரசின் அங்கம் வகிக்கும் கூட்டணியில் இருப்பதால் மாணவர் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் ஆசிரியர் நியமனங்கள் இருக்கும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் எடுத்துக் கூறி கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்து மாணவர் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் வகுப்பிற்கு குறைந்தபட்சம் ஒரு ஆசிரியரை நியமிக்க வலியுறுத்த வேண்டும். அவ்வாறு கட்டாய கல்விச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தால் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் வகுப்பிற்கு ஒரு ஆசிரியரை நியமனம் செய்வார். ஒன்றிய அரசின் கூட்டணியில் நெருக்கமாக இருக்கும் தாங்கள் உடனடியாக கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து வகுப்பிற்கு குறைந்தபட்சம் ஒரு ஆசிரியரை நியமனம் செய்ய வலியுறுத்த வேண்டும். கடந்த செப்டம்பர் மாதம் உச்ச நீதி மன்ற தீர்ப்பால் பணியில் உள்ள ஆசிரியர்களும் தகுதித் தேர்வு எழுத வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்து ஆசிரியர் தகுதி தேர்வில் விலக்கு அளிக்க வலியுறுத்த வேண்டும்.

மேலும் பல ஆண்டுகளாக தமிழ்நாட்டு ஏழை, எளிய மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை சிதைக்கக் கூடிய வகையில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்காமல் பழிவாங்கும் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி விரைவில் அதைப் பெற்று தர அன்புமணி ராமதாஸ் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.